2. சிறப்புக் கவன ஈர்ப்பு

சேலம் மாநகராட்சி, வார்டுகள் மறுவரையறை செய்து விரிவாக்கம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. சேலம் மாநகராட்சியின் வார்டுகளை மறுவரையறை செய்து விரிவாக்கம் செய்ய வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியாக இருந்த சேலம், மாநகராட்சியாக 27 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. சேலம் மாநகராட்சி 60 வார்டுகளைக் கொண்டது. சேலம் மாநகராட்சியிலே மக்கள்தொகை பெருகிவருகிற இந்தச் சூழ்நிலையில் சில வார்டுகளிலே 30,000, 35,000, 40,000 என்று மக்கள்தொகை உயர்ந்துள்ளது. சேலம் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டபிறகு 27 ஆண்டுகளாக மறுவரையறை, மறுசீரமைப்புச் செய்யப்படவில்லை. மக்கள்தொகை பெருகியுள்ள இந்தச் சூழ்நிலையில், 60 வார்டுகளைக் கொண்ட சேலம் மாநகராட்சியை மறுசீரமைப்பு செய்ய வேண்டி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே வார்டு மறுவரையறை செய்து முடிக்கப்பட்டு, 15-12-2018 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சேலம் மாநகராட்சியில் 60 வார்டுகளுக்கு மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. தற்போது சேலம் மாநகராட்சியிலுள்ள வார்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது குறித்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. 2011 ஆம் ஆண்டைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, சேலம் மாநகராட்சியின்*

மொத்த மக்கள்தொகை 8,29,267 ஆகும். தற்போது 2021 ஆம் ஆண்டில் மக்கள்தொகை சுமார் 9.52 இலட்சமாக உயர்ந்துள்ளது. சேலம் மாநகராட்சி மட்டுமல்லாமல், மாநிலத்திலுள்ள பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இதுபோன்ற வார்டு மறுவரையறை செய்து, திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. எனவே, மக்கள்தொகை பெருக்கத்தின் அடிப்படையிலும், வரப்பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையிலும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மீண்டும் வார்டு மறுவரையறை செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

இப்போது மாநகராட்சிகளுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மக்கள்தொகையின் அடிப்படையில் வார்டுகளினுடைய எண்ணிக்கை அரசின் சார்பாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகை மூன்று இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 52 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை மூன்று இலட்சத்திற்கு மேல் நான்கரை இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 58 வார்டுகள் என்று இருக்கலாம்; மக்கள்தொகை நான்கரை இலட்சத்திற்குமேல் ஆறு இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 63 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை ஆறு இலட்சத்திற்கு மேல் 8 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 69 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 8 இலட்சத்திற்கு மேல் 10 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 75 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 10 இலட்சத்திற்கு மேல் 15 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 88 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 15 இலட்சத்திற்கு மேல் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 100 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 20 இலட்சத்திற்கு மேல் 30 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 121 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 30 இலட்சத்திற்கு மேல் 40 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 142 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 40 இலட்சத்திற்கு மேல் 50 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 161 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 50 இலட்சத்திற்கு மேல் 60 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் 180 வார்டுகள் இருக்கலாம்; மக்கள்தொகை 60 இலட்சத்திற்கு மேல் இருந்தால் 200 வார்டுகள் இருக்கலாம் என்று சொல்லப்பட்டு, இப்பொழுது ஆய்விலே இருக்கிறது. வந்திருக்கின்ற மனுக்களின் அடிப்படையில் நகராட்சித் துறை அதிகாரிகள் அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள்.

விரைவிலே அதைப்பற்றி முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 8 இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை உள்ள மாநகராட்சியிலே 75 வார்டுகள் இருக்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதன்படி சேலம் மாநகராட்சியிலே 75 வார்டுகள் உள்ள அளவிலே மறுவரையறை சீரமைப்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும். ஆனால், இந்தக் கணக்குப்படி வருமென்றால் ஆவன செய்யப்படும். அப்படி கணக்குப்படி இல்லாமல், குறைவாக இருந்தால் 69 வார்டுகள் என்று வரும்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.